**எங்கள் ரொறன்ரோ, தொகுப்பு 6, வெளியீடு 3**

## ரொறன்ரோப் பனிச்சறுக்கல் (ski/snowboard) மையச் சரிவுகளில் skiing/snowboarding செய்யுங்கள்

புதிதாக ஆரம்பிப்பவர் முதல், திறன்பெற்றவர் வரையுள்ள பனிநடைக்கட்டையை/பனிப்பலகையைப் (skier/snowboarder) பயன்படுத்துபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள எங்களுடைய பல செயல்முறை வகுப்புக்களில் ஒன்றுக்கு வந்து பனிநடைக்கட்டை மற்றும் பனிப்பலகை பயன்படுத்தும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும்படி பயிற்றப்பட்ட பயிற்றுனர்கள் உங்களை அழைக்கின்றார்கள். முடியுமானவரைக்கும் மிகச் சிறந்த அனுபவத்தை நீங்கள் பெறுவதற்கான சிறந்த கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுவதற்காக, எங்களுடைய பயிற்றுனர்கள் தொடர்ந்தும் தங்களுடைய திறன்களை விருத்திசெய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பனிக்காலத்தில் முழுக் குடும்பமும் உடல்நலம் குன்றாமலிருக்கவும் மகிழ்ச்சியாக இருக்கவும் ரொறன்ரோவின் பனிச்சறுக்கல் செயல்முறை வகுப்புக்கள் நல்ல வழியாக உள்ளன. உங்களுடைய வாழ்க்கை முறைக்கும் குடும்பத் தேவைகளுக்கும் ஏற்ப, பல்வேறு வகையான பருவகாலச் சீட்டுக்களை இரண்டு மையங்களும் வழங்குகின்றன. இரண்டு இடங்களிலும் பருவகாலச் சீட்டுக்கள் (season passes) ஏற்றுகொள்ளப்படும்.

Centennial Park – 256 Centennial Park Road

(Renforth Drive ன் 1 block மேற்கு , Rathburn Road ன் வடக்கு, arenaவின் பின்னே) 416-394-8754

வசதிகள் உள்ளடக்குபவை: ski மற்றும் snowboard பாடசாலை, இறக்கம் நோக்கிச் சரியும் மற்றும் snowboard வாடகைகள், தலைக்கவசம் (helmet) வாடகைள், snowmaking, t-bar, carpet lift, இரவு skiing மற்றும் சிற்றுண்டியகம்.

Earl Bales Park – 4169 Bathurst Street
(Sheppard Avenue மேற்கின் 1 light தெற்கு, Earl Bales Park ன் உள்ளே) 416-395-7931
வசதிகள் உள்ளடக்குபவை: ski மற்றும் snowboard school, இறக்கம் நோக்கிச் சரியும் மற்றும் snowboard வாடகைகள், தலைக்கவசம் (helmet) வாடகைள், hi-tech snowmaking, நான்கு பேர் இருக்கும் கதிரை உயர்வு (chair lift), rope tow, இரவு skiing, சிற்றுண்டியகம் மற்றும் fireplace.

இரண்டு மையங்களும் டிசம்பர் நடுப்பகுதியில் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளன (வானிலை அனுமதித்தால்).

toronto.ca/ski
311

# 311 ரொறன்ரோவுக்கு அதிகளவிலான வாடிக்கையாளர் திருப்தி கிடைத்துள்ளது

கேள்வி அல்லது சேவைக்கான கோரிக்கை ஒன்றுக்காக 311 ஐ அழைக்கும் வாடிக்கையாளர்கள், 311 ரொறன்ரோ மற்றும் அதன் தொடர்பு மையப் பணியாளர்களின் வாடிக்கையாளர் சேவையில் மிகுந்த திருப்தியடைந்துள்ளார்கள் என்பதை Ipsos-Reid ஆல் அண்மையில் நடாத்தப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வில், 311 ஐ அழைத்த 500 பேர் அந்தச் சேவையுடன் தொடர்பான அவர்களின் ஊடாட்டத்தின் 48 மணி நேரத்துக்குள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆய்வுக்குப் பதிலளித்தவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் 311 சேவையில் திருப்தியடைந்துள்ளார்கள், அவர்களில் பலர் (75%) மிகவும் திருப்தியடைந்துள்ளார்கள். வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதிகளும் மிக அதிகளவிலான வாடிக்கையாளர் திருப்தியைப் பெற்றுள்ளார்கள். அழைப்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள் (94%) பணியாளர்களுடனான தங்கள் ஒட்டுமொத்த அனுபவத்தில் தாங்கள்திருப்தியடைந்துள்ளதாகத் தெரிவித்தார்கள்.கோரிக்கைக்கான தீர்வுத் திறன், முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்கல் மற்றும் செயல்முறையைத் தெளிவாக விளக்கல் போன்றவற்றுக்கு மிகவும் அதிகமான புள்ளிகள் கிடைத்துள்ளன.

செப்ரெம்பர் 2009 ல், பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்ட, 311 தொடர்பு மையத்தின் முதல் முதல் வாடிக்கையாளர் திருப்தி ஆய்வாக Ipsos-Reid ஆய்வு உள்ளது. திருப்தியான வாடிக்கையாளர்கள் பற்றிய உற்சாகமூட்டும் செய்தியுடன், நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள அழைப்பாளர்களும் 311 சேவைகளை நன்கு பயன்படுத்துவதையும், கிழமையின் எந்த நாளில், எந்த நேரத்தில் தொலைபேசிச் சேவையை அழைப்பாளர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதில் தங்கியிராது திருப்தி மட்டங்கள் எப்போதும் மிக உயர்வாக இருப்பதையும் அது அறிந்துகொண்டது. அழைப்பாளர்களில் 56 சத வீதம் பெண்களாகவும் 44 சத வீதம் ஆண்களாகவும் இருப்பதை இந்த ஆய்வு கண்டறிந்தது. அழைப்பாளர்களில் பாதிப் பேர் பொதுவான தகவல்களுக்கும் மீதிப் பாதிப் பேர் சேவைக் கோரிக்கையை உருவாக்க அல்லது பின் தொடரவும் அழைத்துள்ளனர்.

311

toronto.ca/311

311@toronto.ca

@311toronto

# ரொறன்ரோ – யோர்க் Spadina subway விரிவாக்கம் – முன்னேற்றத்தின் இற்றைப்படுத்தல்

தற்போதைய Yonge-University-Spadina subway ன் வடக்குப் பாதையை, யோர்க் மாநகர சபை பிரதேசத்துக்கு விரிவாக்கும் புதியதொரு 8.6-km subway ஐ TTC நிர்மாணிக்கிறது. அதன் வழியே ஆறு புதிய நிலையங்கள் சேர்க்கப்படுகின்றன. 85 சத வீதத்துக்கும் மேற்பட்ட, சுரங்கம் அமைத்தல் வேலைகள் முடிவடைந்து விட்டன. அத்துடன் இரட்டைச் சுரங்கத்தில் தடங்கள் பொருத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் செய்திட்டத்துக்கு உட்பட்ட அனைத்து நிலையங்களும் தற்போது நிர்மாணிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்தமாக, இந்தச் செய்திட்டக் கட்டுமானத்தின் நிறைவுக் கட்டத்தின் 50 சத வீதம் பூர்த்தியாகியுள்ளது. Spadina விரிவாக்கம் 2016 இலையுதிர்காலத்தில் பூர்த்திசெய்யப்படும்.

இந்தச் செய்திட்டம் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள்:

• மொத்தமாகத் தோண்டப்பட்ட பொருள் - 1,400,000m3 – Rogers Centre ஐ நிரப்பப் போதுமானது

• மொத்தமாக ஊற்ற வேண்டிய கற்காரை (Concrete) - 400,000m3 – 10 CN கோபுரத்துக்கு சமனானது

• பொருத்தப்பட்ட Rebar – 70,000 தொன்கள்

• பொருத்தப்பட்டுள்ள முன்கூட்டி வார்க்கப்பட்ட சுரங்க உள்படையின் மொத்த அளவு – 9,000 வளையங்கள்; 54,000 வெட்டுத்துண்டங்கள்

• பொருத்தப்பட வேண்டிய முன்கூட்டி வார்க்கப்பட்ட இரட்டை பிணைப்புக்கள் – 11,000

• சுரங்க அகழ் இயந்திரங்கள் ஒவ்வொன்றினதும் நிறை 430,000 kg – 280 மோட்டார் வாகனங்களுக்குச் சமமானது

spadina.ttc.ca

## நகரபிதா ரொப் ஃபோர்ட்டின் செய்தி

ஒரு புதிய ஆண்டை நோக்கி, குளிர்கால மாதங்களுக்கு ஊடாக நாம் பயணிக்கும் போது, ரொறன்ரோவின் குடியிருப்பாளர்களும், வரிசெலுத்துபவர்களும் முன்நோக்கி எதிர்பார்க்க - புதிய subway கள், ஒரு பிரகாசமான பொருளாதாரத் தோற்றம், மேலும் தொழில்கள் மற்றும் ஒரு வலுவான பொருளாதாரம் என நிறைய உள்ளன.

வர்த்தகங்களையும் முதலீடுகளையும் ஈர்க்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதில் எனது நிர்வாகம் கவனம் செலுத்தியது, அது பயன்தருகிறது. இந்த நிர்வாகத்தின் கீழ் ரொறன்ரோ, வர்த்தகங்களுக்கும் முதலீடுகளுக்குமான ஒரு காந்தமாக மாறியுள்ளது. இன்று, ரொறன்ரோ ஒரு உலகளாவிய பொருளாதார வலுச்சக்தியாக இருக்கிறது.  உலகிலுள்ள வர்த்தகங்களுக்கும் முதலீடுகளுக்குமான உயர்மட்ட இடங்களில் ஒன்றாக நாங்கள் தொடர்ந்தும் மதிப்பிடப்படுகின்றோம்.

ரொறன்ரோவின் பொருளாதார வளர்ச்சியையும் தொழில் உருவாக்கத்தையும் துரிதப்படுத்துவதற்கான ஒரு உத்திப்பூர்வத் திட்டம், போட்டித்தன்மைக்கு இசைவாக இருத்தல் – எனப்படும் ஒரு புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை எனது நிர்வாகம் உருவாக்கியுள்ளது. ரொறன்ரோவில் உள்ள தொழில் தரத்தை உயர்த்துவதையும், வர்த்தகங்களுக்கும் முதலீடுகளுக்கும் மேலதிக ஈர்ப்பைக் கொடுக்கும் ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு உதவும்முகமாக ரொறன்ரோ நகரினதும் அதன் முகவர்களினதும் கொள்கைகள்/செயற்பாடுகள் இணங்குவதை உறுதிப்படுத்துவதையும் இத் திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

நான் அலுவலகத்தைப் பொறுப்பேற்ற போது ரொறன்ரோவின் வேலைவாய்ப்பின்மை 11 சத வீதத்தினுள் தளம்பிக் கொண்டிருந்தது. மூன்று வருடங்களின் பின்னர், இப்போது ரொறன்ரோவின் வேலைவாய்ப்பின்மை வீதம் 7.1% ஆக உள்ளது. பருவகாலத்திற்கேற்ப சரிசெய்யப்படும் கனடா புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மாதாந்த வேலைவாய்ப்புத் தரவு, ஆகஸ்ட் 2013 ல் ரொறன்ரோவின் வேலைவாய்ப்பின்மை வீதம் 7.1% எனத் தெரிவிக்கிறது, இது ஆகஸ்ட் 2012 ல் இருந்த 10% ஐ விட 2.9% குறைவானது. அத்துடன் 23 வருடங்களில் அதிகபட்சத் தொழில் அளவை ரொறன்ரோ எதிர்பார்க்கின்றது. கடந்த வருடத்தை விட, தற்போது மேலும் 58,000 குடியிருப்பாளர்கள் வேலை செய்கிறார்கள்.

ரொறன்ரோவின் கலை மற்றும் பொழுதுபோக்குத் துறையின் வளர்ச்சி அந்தத் தொழில்களின் 13,000 ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. அதனால் தான் சமீபத்தில் நான் ஒரு இசை வர்த்தகத் தூதுக்குழுவை Austin, Texas  க்குத் தலைமை தாங்கிச் சென்றேன். Austin உலக நேரடி இசையின் தலைநகர் ஆகும், வட அமெரிக்காவில் உள்ள பொருளாதார மற்றும் கலாச்சாரப் பன்முகத்துவம் மிகுந்த நகர்களில் ரொறன்ரோ ஒன்றாகும். Austin ரொறன்ரோவில் மூன்றில் ஒரு பங்காக இருந்தும்கூட, ஒவ்வொரு

வருடமும் பொருளாதாரச் செயற்பாட்டால் $1.6 பில்லியனை உருவாக்கும், மனதை ஈர்க்கக்கூடிய ஒரு இசைத் தொழில்துறையை அவர்கள் உருவாக்கியுள்ளார்கள், இந்த அளவு, ரொறன்ரோவில் இருக்கும் எங்களுடைய இசைத் தொழில்துறையின் மூன்று மடங்காகும். கலைக்கும் ஒப்பீட்டளவில் மேலான பொருளாதாரத்துக்கும் இடையேயான நேரடி இணைப்பை நாம் விளங்கிக்கொண்டதாலேயே நாம் Austinக்குச் சென்றோம். மேலும், சர்வதேச அளவில் மதிக்கப்படும் ரொறன்ரோவின் இசைத் தொழில் துறையை நகர் எவ்வகையில் ஊக்குவிக்கலாம் மற்றும் பேணி வளர்க்கலாம் என்ற புரிதலையும் இந்த பயணம் வழங்கியது. அத்துடன், ஒரு சர்வதேச நேரடி இசைச் சுற்றுலா இடமாக ரொறன்ரோவை நிலைநிறுத்துவதற்கு நகர், இசை தொழில்துறையுடன் சேர்ந்து எப்படி வேலை செய்யலாம் என்ற புரிதலையும் தந்தது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, ரொறன்ரோவின் திரைப்படம், தொலைக்காட்சி, விளம்பரங்கள் மற்றும் அசைவூட்டத் துறைகள் மிகப் பெரிய வெற்றியை அடைந்து வருகின்றன. 2012ன், $1.2 பில்லியன் நேரடித் தயாரிப்புச் செலவுகள், 2000 முதல் நகர் அடைந்த மிக உச்ச அளவுக்கு சமனாகவும், 2011 ஐ விட 5.9 சத வீதம் அதிகமாகவும் உள்ளன. இது, ஒரு பில்லியன் டாலர்களை விட அதிகமான செலவுகள் உள்ள இரண்டாவது வருடமாக இருக்கின்றது. இது மீண்டும், ரொறன்ரோவை வர்த்தகம் செய்வதற்கும், தொழில்களை உருவாக்கவும் ஒரு சிறந்த இடமாகவும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சுபீட்சம் நிறைந்ததாகவும் மாற்றுகிறது.

யாவும் நன்கு நிகழ்வதற்கு, நகருக்குள்ளான மக்களின் போக்குவரத்தை ரொறன்ரோ நகர் மேம்படுத்த வேண்டும். இது சுலபமானதல்ல, ஆனால் இப்போது அரசாங்கத்தின் அனைத்து மூன்று மட்டங்களும் ரொறன்ரோவில் புதிய subwayகளை நிர்மாணிக்க உறுதி எடுத்துள்ளன. நான் நகர பிதாவாகத் தெரிவுசெய்யப்பட்டால் நாங்கள் ரொறன்ரோவில் புதிய subwayகளை நிர்மாணிப்போம் என மூன்று வருடங்களுக்கு முன் உறுதிமொழி அளித்திருந்தேன். அதைத்தான் நாங்கள் செய்கின்றோம். ஒரு தரமுள்ள விரைவான போக்குவரத்துக்காக ஸ்காபோரோ குடியிருப்பாளர்கள் நீண்டகாலமாகக் காத்திருக்கிறார்கள். அந்தக் காத்திருப்பு கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஸ்காபோரோ குடியிருப்பாளர்களுக்கும் ரொறன்ரோ முழுக்க உள்ளவர்களுக்குமான கனடா அரசாங்கத்தினதும் ஒன்ராறியோ அரசாங்கத்தினதும் அர்ப்பணிப்புக்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

ரொறன்ரோ நகரத்தவரின் நகர்வை செயலாக்குவதற்கு, ஸ்காபோரோ subway விரிவாக்கம் மூலம் நாம் முதலிடுகின்றோம். ரொறன்ரோ குடியிருப்பாளர்களுக்கு, அடுத்த 100 வருடங்களுக்கு நன்மையளிக்கக் கூடிய போக்குவரத்தை நாம் ஒன்றுசேர்ந்து கட்டிஎழுப்புகின்றோம். ஸ்காபோரோ மையத்தினூடான subway விரிவாக்கம், பயணிகள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும், நெரிசலைக் குறைக்கும் மற்றும் சமூகங்களை மாற்றமடையச் செய்யும். அத்துடன் இது எண்ணற்ற தொழில்வாய்ப்புக்களையும் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்கும்.

ஒன்றுசேர்ந்து, ரொறன்ரோவின் எதிர்காலத்துக்கு நாம் முதலிடுகின்றோம்.

வருகின்ற வருடத்தில், இந்தச் சிறந்த நகரின் குடியிருப்பாளர்களுக்கும் வரிசெலுத்துபவர்களுக்குமான ஒரு சிறப்பான பொருளாதாரமுள்ள எதிர்காலத்துக்கும், குறைந்தளவு வரிகளுக்கும், எங்களுடைய சிறந்த நகரின் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட subway அமைப்புக்கும் தொடர்ந்து பணியாற்றுவேன் என நான் உறுதிமொழி அளிக்கின்றேன்.

உங்கள் உண்மையுள்ள,

நகரபிதா ரொப் ஃபோர்ட்

toronto.ca/mayor_ford

## ரொறன்ரோவின் வளர்ச்சியும் சுபீட்சமும்

அனேகமான நகரத் தரவரிசைகள், உலகின் 10 சிறந்த நகரங்களுள் ஒன்றாக ரொறன்ரோவைக் கணிப்பதற்கு சிறந்த காரணமுண்டு. 2012 மற்றும் 2013 ல், நகரின் சனத்தொகை மற்றும் வேலைவாய்ப்பு அளவு, சாதனை நிலைகளை எட்டியிருப்பது, வசிப்பதற்கும் பணியாற்றுவதற்கும் மக்கள் மிகவும் விரும்பக்கூடிய ஒரு இடமாக ரொறன்ரோ இருப்பதைக் காட்டுகின்றது.

சிக்காக்கோவைப் புறம்தள்ளி விட்டு மெக்சிக்கோ நகரம், நியூ யோர்க், லோஸ் அன்சல்ஸ் என்பவற்றுக்கு அடுத்ததாக, வட அமெரிக்காவின் நான்காவது பெரிய மாநகரமாக, மொத்தச் சனத்தொகை மதிப்பீடு 2.8 மில்லியனைக் கொண்ட ரொறன்ரோ வந்துள்ளது. கடந்த 10 வருடங்களாக ரொறன்ரோவின் வருடாந்தச் சனத்தொகைப் பெருக்க வீதம் சீராக அதிகரித்துள்ளது, தற்போது கிட்டத்தட்ட 38,000 மக்கள் என்ற வருடாந்த வீதத்தில் இது அதிகரிக்கின்றது.

ஐந்து வருடங்களின் பின்னர் நகரின் வேலையின்மை வீதம் குறிப்பிடத்தக்க அளவில், அதன் மிகக் குறைந்தளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது (ஆகஸ்ட் 2012 முதல் ஆகஸ்ட் 2013 வரை அண்ணளவாக 3 சத வீதம்). ரொறன்ரோவின் வேலையின்மை அளவு இவ்வளவு குறைவாக ஏப்ரல் 2008ல் கடந்த முறை இருந்தது. அத்துடன் 12 வருடத்தில் முதல் முறையாக தேசிய சராசரி வீதத்துக்கு (7.1 சத வீதம்) சமமாக ரொறன்ரோவின் வேலையின்மை அளவு இருந்தது.

வர்த்தக நிறுவனங்களில், அதன் அதிகப்பட்ச மொத்த வேலைவாய்ப்பை 1990 முதல் அடைந்ததிலிருந்து 2012 லும், ரொறன்ரோவின் வேலைவாய்ப்பு அளவு தொடர்ந்து மேலும் அதிகரித்தது. நகரின், வருடாந்த ரொறன்ரோ வேலைவாய்ப்பு ஆய்வு 2012ன் படி 1,331,600 மக்கள் முழு நேர மற்றும் பகுதி நேர வேலைகளில் இருக்கின்றார்கள். சாதகமான வேலை வளர்ச்சியைத் தொடர்ச்சியாக ரொறன்ரோ அடைந்ததன் மூன்றாம் ஆண்டை இது அடையாளப்படுத்துகின்றது.

2012ல், ரொறன்ரோ திரை-சார் தொழில்துறையின் (திரைப்படம், தொலைக்காட்சி, விளம்பரங்கள், அசைவூட்டம்) $1.2 பில்லியனை எட்டிப்பிடிக்கும் நேரடித் தயாரிப்புச் செலவுகள், நகரினால் ஒரு போதும் அடையப்படாத மிக உச்ச அளவுக்கு சமனாகி ஒரு சாதனையைப் படைத்துள்ளன. முதன் முதலில் உள்ளூர் தயாரிப்புக்கள் $500 மில்லியனை அடைந்த போது, பாரிய தயாரிப்புக்கள் $1 பில்லியனை முதல் முறையாகத் தொட்டுள்ளன. Pacific Rim எனப்படும் எப்போதுமில்லாத மிகப்பெரும் திரைப்படத் தயாரிப்பும் 2012 ல் ரொறன்ரோவில் நிகழ்ந்துள்ளது.

ரொறன்ரோவின் பொருளாதார வளர்ச்சியையும் தொழில் உருவாக்கத்தையும் துரிதப்படுத்துவதற்கான ஒரு உத்திப்பூர்வத் திட்டம், போட்டித்தன்மைக்கு இசைவாக இருத்தல் – எனப்படும் ஒரு புதிய பொருளாதார வளர்ச்சித் திட்டத்தை இந்த வருடம் நகர சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

## Bloor/Gladstone நூலகம்

ரொறன்ரோ பொது நூலகத்தின் Bloor/Gladstone கிளை, ஒக்ரோபர் 23, 1913, வியாழக்கிழமை அலுவலகரீதியாகத் திறக்கப்பட்ட போது, கனடாவிலேயே இது தான் மிகப் பெரிய நூலகக் கிளையாக இருந்தது. அத்துடன், மொத்தச் செலவு $60,000 த்துடன் புத்தகங்களுக்கு $5,000 ஆக, இது தான் மாநகர நிதியிலிருந்து மட்டும் கட்டப்பட்ட முதலாவது நூலகக் கட்டடமாகும்.

மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கத்துக்காக இந்தக் கிளை 2007 ல் மூடப்பட்டது; யூலை 2009ல் மீளத் திறக்கப்பட்டது. கண்ணாடிச் சேர்ப்பினால், ஒரு சுற்றுச்சூழல் பசுமை கூரையை காட்டும் ரொறன்ரோ பொது நூலகத்தின் முதல் கட்டடமாக இது உள்ளது.

## பனிக்கால-விவேகத் தண்ணீர்க் குறிப்புகள்

பனிக்காலப் பராமரிப்புக்கும் ஆயத்தத்துக்குமான நேரம் இது. நகரில், ரொறன்ரோவின் சிக்கலான நிலம்கீழ்க் குழாய்கள், கழிவுநீர் குழாய்கள், வீதியில் உள்ள சதுரவடிவ கழிவுநீர் தட்டுக்கள் போன்றவற்றை நாம் தொடர்ந்தும் புதுப்பித்துக்கொண்டும், பராமரித்துக்கொண்டும் இருக்கின்றோம். பனிக்கால வானிலைக்கு உங்கள் வீட்டைத் தயார் செய்வதற்காக நீங்கள் எடுக்க வேண்டிய படிமுறைகளும் உள்ளன. இதோ சில:

- நீர் குழாய்களில் ஏற்படும் வெடிப்பு சேதத்தை ஏற்படுத்துவதுடன் நீரையும் வீணாக்குகின்றது; முதலாவது பனி உறைகல் வர முன்பாக, வெளிப்புறத்துக்கான நீர் வழங்கலையும் குழாய்களையும் மூடுங்கள்.
- அடித்தள யன்னலுக்கு வெளியில் உள்ள குழியை (window wells) மூடுங்கள் மற்றும் கசிவுகளுக்கு வழிவகுக்கக் கூடிய அடித்தளச் சுவர்களையும் சரி செய்யுங்கள்.
- மழை நீர்வடியும் குழாய்களில் குப்பை கூளங்களைத் துப்பரவு செய்யுங்கள்.
- பனி உறைவால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய குழாய்களை, குறிப்பாக வெளிச் சுவர்களுக்கு அருகேயுள்ளவை, சிறிய இடங்களிலுள்ளவற்றைக் (crawl spaces மற்றும் attic) காப்பிடுங்கள்.
- அத்திவாரத்திலிருந்து மழையும் பனியும் விலகியிருக்க வையுங்கள்.
- கழிவுநீர் தொகுதியுடனான உங்களுடைய மழைநீர் வடியும் குழாயின் தொடர்பை அகற்றுங்கள்.

toronto.ca/water

## ரொறன்ரோ தீயணைப்பு சேவையினர், பின்வருவனவற்றை இந்த விடுமுறைக் காலத்தில் ஞாபகத்தில் வைத்திருக்கச் சொல்கின்றனர் …

பன்னிரண்டு நாட்கள் விடுமுறைத் தீயணைப்புப் பாதுகாப்பு

நாள் 1 தினமும் மரங்களுக்கு புதிய நீரிடுங்கள்.

நாள் 2 அலங்கரிக்க முன்னர் விளக்குத் தொகுதிகள் அனைத்தையும் சரிபாருங்கள்.

நாள் 3 உங்களின் புகை அலாரங்கள் வேலைசெய்கின்றன என்பதை உறுதிப்படுத்துங்கள். அவை பழுதாகிப் போகலாம் என்பதை நினைவில் வைத்து, 10 வருடங்களுக்கு ஒரு முறை அவற்றை மாற்றுங்கள்.

நாள் 4 உங்களின் காபன்மொனொட்சைட்டு அலாரங்கள் வேலைசெய்கின்றன என்பதை உறுதிப்படுத்துங்கள். அவை பழுதாகிப் போகலாம் என்பதை நினைவில் வைத்து, 7-10 வருடங்களுக்கு ஒரு முறை அவற்றை மாற்றுங்கள்.

நாள் 5 தீ ஏற்பட்டால் எப்படிப் பாதுகாப்பாக வெளியேறுவது என்பது எல்லோருக்கும் தெரிந்திருப்பதை உறுதிப்படுத்தவும். தீயிலிருந்து தப்பிக்கும் திட்டம் ஒன்றைப் பயிற்சி செய்யுங்கள்.

நாள் 6 மின்சார நீடிப்பு வடங்களைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துங்கள். ஒரு விரிப்புக்குக் (rug) கீழ் அவை ஒருபோதும் போகாமல் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.

நாள் 7 இடத்தைச் சூடேற்றும் வெப்பப்படுத்திகளுக்குப் போதுமான இடம் கொடுங்கள். எரியக்கூடிய பொருள்களிலிருந்து அவற்றை ஒரு மீற்றர் தூரம் தள்ளி வையுங்கள்.

நாள் 8 வெளியில் போகும் போது, ஊதி அணையுங்கள்! ஒரு அறையை விட்டு விலக முன்னர் அல்லது படுக்கப் போக முன்னர் அனைத்து மெழுகுவர்த்திகளையும் ஊதி அணையுங்கள்.

நாள் 9 பிள்ளைகளுக்குத் தெரியாமலும், அவர்களால் எடுக்க முடியாதபடியும் நெருப்புக்குச்சிகளையும் தீமூட்டிகளையும் வையுங்கள்.

நாள் 10 எதை வெப்பமாக்குகிறீர்கள் என்பதைக் கண்காணியுங்கள்! சமைக்கும் போது எச்சரிக்கையாக இருங்கள்.

நாள் 11 புகைபிடிப்பவர்களை வெளியில் புகைபிடிக்க உற்சாகப்படுத்துங்கள்.

நாள் 12 வீட்டுக்கு ஒரு வாடகை வண்டியை எடுத்துப் போவதற்கும் மேலான பொறுப்பு, பொறுப்புடன் மதுபானம் அருந்துபவர்களுக்கு இருக்கின்றது. அனேகமான உயிருக்கு ஆபத்தான தீ விபத்துகளுக்கு மதுபானம் பொதுவான ஒரு காரணியாகும்.

toronto.ca/fire/prevention

## எங்கு உதவி பெறலாம் என உங்களுக்குத் தெரியாத போது

உங்களுக்கு உதவி வேண்டுமா, ஆனால் அதை எங்கே பெறுவது என உங்களுக்குத் தெரியவில்லையா? அது வீதித் திருத்தல் போன்ற ரொறன்ரோ நகரச் சேவைகள் ஆயின் நீங்கள் 311 ஐ அழைக்க வேண்டும். அது அவசரகால நிலையாயின் நீங்கள் 911 ஐ அழைக்க வேண்டும்.

அந்தப் பிரிவுகளுக்குள் உங்களுடைய தேவைகள் அமையாவிட்டால் என்ன செய்வது? அப்படியானல் நீங்கள் 211 ஐ அழைக்க வேண்டும்.

ஒருவேளை, உங்களுக்குப் பசிக்கலாம், உங்களுடைய வீட்டுச் சொந்தக்காரருடன் பிரச்சினை இருக்கலாம், துன்புறுத்தப்படலாம், உங்களுடைய பயன்பாடு கட்டணத்தைச் செலுத்த முடியாதிருக்கலாம் அல்லது வேறு பிரச்சினை அல்லது தேவை இருக்கலாம். நீங்கள் கனடாவுக்குப் புதியவரா அல்லது மருத்துவ உதவி அல்லது சில சட்ட ஆலோசனை தேவையா?

எங்கே உதவி கேட்பது என உங்களுக்குத் தெரியாத போது, பகலோ, இரவோ எந்த நேரமாக இருந்தாலும் 211 ஐ அழையுங்கள். நேரடித் தகவல்களுடனும், கவனமாகக் கேட்டு உங்களுடைய தேவைகளுக்குப் பதில் சொல்லும் வகையில், கிடைக்கக்கூடிய சிறந்த சேவைகளைப் பரிந்துரைக்கும் நிபுணருடனும் நீங்கள் தொடர்புபடுத்தப்படுவீர்கள்.

தங்களுக்காக மட்டுமன்றி, தங்களுடைய அன்புக்கு உரியவர்களுக்காகவும் சினேகிதர்களுக்காகவும் கூட, 211ஐ அனேகமானவர்கள் அழைக்கின்றார்கள்.

உங்களுக்கு உதவிசெய்ய 211 தான் பொருத்தமான உதவிக்கரம் என்பதில் உங்களுக்கு 100% நிச்சயம் இல்லாவிட்டாலும் கூட, எங்களை ஒரு தடவை பரீட்சித்துப் பாருங்கள். நினைவில் வைத்திருங்கள், இது அந்தரங்கமானது, இலவசமானது, கிட்டத்தட்ட 170 மொழிகளில் இச் சேவை கிடைக்கின்றது.

211Toronto.ca. லும் உதவி கிடைக்கின்றது

2002 இல் தொடங்கப்பட்ட, சமூக மற்றும் சமூக சேவைகளுக்கான அணுகலை ஒரு சுலபமான படிநிலையில் பொது மக்களுக்கு வழங்கும் ரொறன்ரோவின் 211, கனடாவில் முதல் 211 உதவிக்கரமாக உள்ளது. கடந்த வருடம், உதவிக்கான 338,000 அழைப்புக்களுக்கு நாங்கள் பதில் அளித்துள்ளோம், அத்துடன் எங்களுடைய இணையத்தளத்துக்கு வந்த 733,000 க்கும் அதிகமான பார்வையாளர்களுக்கு சேவையாற்றி உள்ளோம்.

211toronto.ca

## ரொறன்ரோவில் முதியவர்களை ஈடுபாட்டுடனும் சுறுசுறுப்பாகவும் வைத்திருத்தல்

2031 அளவில், இங்கு வாழும் 65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள மக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அதிகரிப்பை ரொறன்ரோ பார்க்கக்கூடும்., ரொறன்ரோ தொடர்ந்தும் வயது முதிர்வதற்குரிய ஒரு சிறந்த நகராக இருப்பதை நிச்சயப்படுத்துவதற்கு பூங்காக்கள் வனவியல் மற்றும் பொழுதுபோக்கு (PFR) முதியோர் பெற்றுக்கொள்ளக்கூடியதும் அவர்களுக்கு கட்டுபடியாகக் கூடியதுமான பொழுதுபோக்குச் செயற்பாடுகளை வழங்குகின்றது.

அனைவரும் அணுகக்கூடிய, PFR ன் சமூக மையங்கள் ரொறன்ரோ முழுவதும் உள்ள அயல்களில் உள்ளன. பூப்பந்து, கலை மற்றும் கைவினை, bocce, Tai Chi மற்றும் பல உள்ளடங்கலான அனைத்துச் செயல்முறைப் பயிற்சிகளுக்குமான கட்டணத்தில் 50 சத வீதம் கழிவு முதியோருக்குக் கிடைக்கின்றது. குறைந்த வருமானமுள்ள மக்கள் Welcome Policy எனப்படும் பல பொழுதுபோக்கு செயல்முறைப் பயிற்சிகளுக்கான ஒரு கட்டண மானியத்துக்கு தகுதியுடையவர்களாக இருக்கலாம்.

உடலுறுதி மற்றும் பொழுதுபோக்குகள் மூலமான நன்மைகளுக்கு மேலாக, தன்னார்வத் தொண்டாற்றுவதன் மூலமும் தங்களுடைய சமூகங்களில் முதியவர்கள் சமூகரீதியாகச் சுறுசுறுப்பாகவும் ஈடுபாட்டுடனும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நலனை PFR வழங்காவிட்டால், பல முதியவர்கள் தங்களுக்குள் ஏற்பாடு செய்து பொழுதுபோக்கு மையங்களில் தங்களுடைய செயல்முறைப் பயிற்சிகளைச் செய்வதற்கு அனுமதி பெறுகின்றனர்.

செயல்முறைப் பயிற்சிகளுக்கு பதிவுசெய்வதிலும் பார்க்க பொழுதுபோக்கு மையங்களுக்கு வந்து போகும் தன்மை முதியவர்களுக்கு அதிகமாக இருப்பதால், நகர் பூராவும் விரும்பிய நேரம் வந்து செய்யும் செயற்பாடுகளையும் PFR வழங்குகின்றது. தொலைபேசி அல்லது இணையப் பதிவுடன் மேலதிகமாக நேரில் பதிவதற்கான தெரிவையும் PFR தொடர்ந்து வழங்கும்.

Welcome Policy மற்றும் செயல்முறைப்பயிற்சிகள் பற்றி மேலும் அறிய, ஒரு FUN Guide, ஐ எடுங்கள் அல்லது toronto.ca/torontofun ஐப் பார்வையிடுங்கள் அல்லது 311ஐ அழையுங்கள். பொழுதுபோக்கு சேவைத் திட்டம் (Recreation Service Plan) 2013-17, பற்றி மேலும் வாசிப்பதற்கு, toronto.ca/parks/engagement/serviceplan க்குச் செல்லுங்கள்.

## உங்களுடைய தண்ணீர்க் கட்டணம் : ற்குக் கட்டணம்நீங்கள் எத செலுத்துகிறீர்கள்?

கேள்வி: உங்களுடைய தண்னீர்க் குழாயை நீங்கள் திறத்தல், மலசலகூடத்தில்  தண்ணீர் அடித்தல் மற்றும் வீதியிலுள்ள சதுர வடிவத் தட்டுக்களினூடு மழை வடிந்தோடுதல், யாவற்றுக்கும் எது பொதுவானது?

பதில்: உங்களுடைய தண்ணீர்க் கட்டணத்தின் ஒரு பகுதியாக இந்த சேவைகள் எல்லாவற்றுக்கும் நீங்கள் பணம் செலுத்துகிறீர்கள்.

ரொறன்ரோ நீர்ப்பிரிவுக்கு ஊடாக நகர் மூன்று பிரதான சேவைகளை வழங்குகின்றது:

• ரொறன்ரோவின் 3.4 மில்லியன் குடியிருப்பாளர்களுக்கும் வர்த்தகங்களுக்கும், மற்றும் யோர்க் பிராந்தியத்தின் சில பகுதிகளுக்குமான பாதுகாப்பான குடி நீர்;

• ரொறன்ரோவின் 2.8 மில்லியன் குடியிருப்பாளர்களுக்கும் வர்த்தகங்களுக்கும், மற்றும் பீல் பிராந்தியத்தின் சில பகுதிகளுக்குமான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு; மற்றும்

• மேற்பரப்பு மற்றும் அடித்தள வெள்ளத்தைக் குறைப்பதற்கும் மற்றும் சூழல் பாதுகாப்புக்குமான வெள்ளநீர் முகாமைத்துவம்.

சொத்துவரியின் அடிப்படையில், ரொறன்ரோ நீர்ச்சேவைக்கு ஆதாரம் கொடுக்கப்படவில்லை, ஆனால் குடியிருப்பாளர்களாலும் வர்த்தகங்களாலும் செலுத்தப்படும் தண்ணீர்க் கட்டணத்தால் முழுமையாக நிதியளிக்கப்படுகின்றது. இந்தச் சேவைகளை வழங்குவதற்காக Toronto Water விரிவான உள்கட்டுமாணத்தைப் பராமரிப்பதுடன், தினமும் 24 மணி நேரமும் வருடத்தின் 365 நாளும் பல வேறுபட்ட சேவைநிலையங்களில் தொழிற்படுகின்றது.

பணம் எங்கிருந்து வருகின்றது (2013 வரவுசெலவுத் திட்டத்தின்படி):

ரொறன்ரோ நகரின் குடியிருப்பாளர்களிடமிருந்தும் வர்த்தகங்களிடமிருந்தும் தண்ணீர்க் கட்டணம் மூலம் சேகரிக்கப்படும் வருமானம்

யோர்க் பிராந்தியத்துக்கான தண்ணீர் விற்பனையால் வரும் வருமானம்

ஏனைய பயன்படுத்தாளர்களின் கட்டணத்திலிருந்து வரும் வருமானம் (உ+ம். தொழிற்சாலைக் கழிவு ஒப்பந்தங்கள், தண்ணீரைத் தற்காலிகமாக மூடும் அல்லது முற்றாக மூடும் வேண்டுகோள்கள் (shut-on மற்றும் shut-off))

பணம் எப்படிச் செலவழிக்கப்படுகின்றது:

அமைப்பைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் உள்ளடங்கலான மூலதன வேலை

தூய குடி நீரை வழங்க, கழிவுநீர்த்தொகுதியைச் சுத்திகரிக்க, வெள்ள முகாமைத்துவத்துக்கு அமைப்பை இயக்குதல்

Toronto Water ஏற்கனவேயுள்ள உள்கட்டுமானத்தைப் பராமரிக்கவும் திருத்தவும் மற்றும் தேவையான இடங்களில் புதிய உள்கட்டுமானத்தை அமைக்கவும் தீவிரமாக வேலை செய்கிறது இருந்த போதிலும் . எங்களுடைய அயலில் உள்ள பெரும்பாலான நகராட்சிகளுடன் ஒப்பிடும் போது இன்னும் ரொறன்ரோவின் நீர் விலை குறைவாகவே இருக்கின்றது அத்துடன் கனடாவின் பிரதான நகரங்களின் கீழ் வரம்புக்குள் அது இருக்கின்றது.

toronto.ca/water

## 311 ரொறன்ரோ

குறிப்பிட்ட சேவைக் கோரிக்கை பற்றிய இற்றைப்படுத்தல் இப்போது மின்னஞ்சல் அல்லது text செய்தி மூலம் கிடைக்கின்றது.

311 ரொறன்ரோவின் வலைதளத்தில் உள்ள தனக்குத்தானே உதவும் (self-serve) வசதியைப் பயன்படுத்தி ஒரு சேவைக் கோரிக்கையை ஆரம்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு, தற்போது மின்னஞ்சல் அல்லது text செய்தி மூலம் இற்றைப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும் தெரிவு உள்ளது.

நிலை பற்றிய இற்றைப்படுத்தலை text செய்தி மூலமான அறிவிப்பாகப் பெற்றுக்கொள்வதற்கு, வாடிக்கையாளர்கள் ஒரு மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை வழங்குவதன் மூலம் "பதிய" வேண்டும்.

இந்தத் தெரிவுடனான சேவைக் கோரிக்கைகள் உள்ளடக்குபவை:

- ஒரு குழி அல்லது சேதமடைந்த வீதி பற்றித் தெரிவித்தல்
- வீதியருகே உள்ள சதுரவடிவக் கழிவுநீர் தட்டுக்களிலுள்ள (catchbasins) குப்பை கூளங்கள்
- ஒரு நடைபாதை, பாலம் அல்லது வீதியில் உள்ள சித்திரம்
- கசியும் அல்லது சேதமடைந்த தண்ணீர்க் குழாய்

இந்த அறிவிப்புக்களுக்கான பதிவைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு பொறுப்பான நகரப் பிரிவு இற்றைப்படுத்தும். சேவைக்கான கோரிக்கையின் வகைக்கு ஏற்ப, பிரிவுகள் புலன்விசாரணை செய்யும் போது, அதற்கான பரிகாரம் செய்யும் போது மற்றும் சேவைக்கான கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் போது என ஒரு வாடிக்கையாளருக்கு மூன்று முதல் ஆறு வரையான சுருக்கமான "அறிவிப்புக்கள்" வரலாம்.

எல்லா வகையான சேவைக் கோரிக்கைகளும் தன்னியக்க அறிவிப்புக்களைச் செய்ய மாட்டாது, ஆனால் பல சேவைகளில், இந்தப் புதிய வசதி தாங்கள் தெரிவித்த பிரச்சினை எப்போது தீர்க்கப்பட்டது என்பதை வாடிக்கையாளர்கள் அறிய உதவுகிறது. அனைத்துச் சேவைக் கோரிக்கைகளிலும், அவை எப்படி ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும், ஒரு சேவைக் கோரிக்கையின் நிலை பற்றி விசாரிப்பதற்கு 311 ஐ 24/7 அழைக்கும் தெரிவு வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் உண்டு. வாடிக்கையாளர்கள் இணையத்திலும், toronto.ca/311 ல் சரிபார்க்கலாம்.

311@toronto.ca
@311toronto

## கழிவை அதற்குரிய இடத்தில் போடுங்கள் – ஒரு மன்னிப்பும் வேண்டாம்!

ரொறன்ரோ குடியிருப்பாளர்கள்: உங்களுடைய வீட்டின் கழிவுப் பொருள்களைப் பிரிப்பதில் நீங்கள் செய்யும் சிறப்பான வேலைக்கு வாழ்த்துக்கள். உங்களுடைய மீள்சுழற்சிப் பொருட்களை குப்பையிலிருந்து பிரிக்க நேரம் எடுப்பதற்கும் சேதனப் பொருள்களை பச்சைக் கொள்கலன்களில் போடுவதற்கும் நன்றி. உங்களுடைய வீட்டுக்கு வெளியேயும் இந்தச் செய்முறைகளை எப்படி விரிவுபடுத்தலாம் என்பதற்கு இதோ சில உதவிக் குறிப்புக்கள்.

வீதியில் நினைவூட்டிகள்

Street Furniture திட்டத்தின் ஒரு பகுதியாக, ரொறன்ரோவில் நகர் முழுவதும் கிட்டத்தட்ட 6,000 பொது இடத்துக்குரிய கொள்கலன்கள் உள்ளன. பல்வேறு இடங்களில், அனேகமாக போக்குவரத்துக்கான தங்குமிடங்கள், எல்லைப்படுத்தும்  பூங்காக்கள் மற்றும் பொது இடங்களுக்கு அண்மையில் நீங்கள் அவற்றைப் பார்த்திருப்பீர்கள். உங்களுடைய குப்பையையும் மீள்சுழற்சிப் பொருள்களையும் போடுவதற்கு அங்கு துளைகள் உள்ளன. மூடியைத் திறப்பதற்கு கட்டையின் மீது காலை வையுங்கள், பின்னர் சரியான இடத்தில் உங்கள் உருப்படியை எறியுங்கள். நெருங்கிப் பாருங்கள். சிகரெட் அடித்துண்டுகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் மற்றொரு சிறிய துவாரத்தை நீங்கள் கவனிக்காமல் விட்டிருக்கலாம். 2012 குப்பைகூள ஆய்வு ஒன்றின் முடிவுகள் அதிகமான சிகரெட் அடித்துண்டுகள் நிலத்தில் இன்னும் எறியப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. அவற்றைப் பாருங்கள். அவற்றைத் தயவு செய்து பயன்படுத்துங்கள்.

சிகரெட் அடித்துண்டுகள் குப்பைகூளங்கள் ஆகும். குப்பைகூளங்கள் செலவுக்கு வழிவகுக்கின்றன. ரொறன்ரோ நகர சட்ட விதிப்படி, நகரின் அல்லது தனியார் சொத்து ஒன்றின் மீது நீங்கள் ஒரு சிகரெட் அடிக்கட்டையை வீசுவது கண்டுபிடிக்கப்பட்டால் உங்கள் மீது அபராதம் விதிக்கப்படலாம். குப்பைகூளங்களை சுத்தம்செய்வதற்கும் பணம் செலவாகின்றது. ஒரு மன்னிப்பும் வேண்டாம் (No butts about it)!

toronto.ca/garbage

## அழுத்துங்கள், ஒதுக்குங்கள், திருமணம் செய்யுங்கள்.

புதிய இணையச் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் ஸ்காபரோ, நோத் யோர்க், யோர்க் குடிமை நிலையங்களிலுள்ள திருமண அரங்குகளைப் பதிவு செய்யலாம் அத்துடன் அவற்றுக்குப் பணம் செலுத்தலாம்.

இந்த மூன்று குடிமை நிலையங்களிலுள்ள திருமண அரங்கு ஒன்றுக்கான அரை மணி நேரப் பதிவுக்கான செலவு $104 உடன் HSTம் ஆகவுள்ளது. ஜோடிகள் ஒரு வழிபாட்டு வினைமுறையாளரையும் இரண்டு சாட்சிகளையும் அழைத்து வர வேண்டும். இடத்தை அலங்கரித்தல் மற்றும் இசை இசைத்தல் அனுமதிக்கப்படும்.

நகர மண்டபத்தில் உள்ள அரங்குகள் தற்போது மூன்றாம் தரப்பினரால் இயக்கப்படுகின்றன. அத்துடன் நேரில் பதிவுசெய்யப்பட வேண்டும்.

toronto.ca/marriage/chambers

## மழைநீர் வடியும் குழாய்த் தொடர்பை கழிவுநீர்த் தொகுதியிலிருந்து நீக்கும் கட்டாயத் திட்டம்:

## 2ம் கட்டத்தினருக்கு, இறுதித் திகதி டிசம்பர் 3 பற்றிய நினைவூட்டுகை

நகரின், மழைநீர் வடியும் குழாய்த் தொடர்பைக் கட்டாயமாக நீக்கும் திட்டத்தின் 2ம் கட்டத்தில் உள்ள சொத்து உரிமையாளர்கள், டிசம்பர் 3, 2013 அளவில் அதை நீக்கவேண்டும். மூன்று கட்டங்களையும் காட்டும் ஒரு வரைபடத்துக்கு toronto.ca/water என்ற இணையத் தளத்துக்குச் செல்லுங்கள்.

மழைநீர் வடியும் குழாய்த் தொடர்பை நீக்கல், கழிவுநீர்த் தொகுதியினுள் படிவுநீர் (மழை அல்லது உருகிய பனி) செல்வதைக் குறைக்கும். அது அடித்தள வெள்ளத்துக்கான அபாயத்தைக் குறைக்கும் அத்துடன் நீரின் தரத்தை மேம்படுத்தும்.

toronto.ca/water
311

## 2013 சமூகச் சுற்றுச்சூழல் தினங்களின் நிறைவு

ரொறன்ரோ நகர் தனது 2013 சமூகச் சுற்றுச் சூழல் தினங்கள் பருவத்தை ஒக்ரோபர் ஆரம்பத்தில் நிறைவு செய்தது. மீளப் பாவிக்கக்கூடிய, மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய அல்லது அபாயகரமான பொருள்களை இட்டுச் செல்வதன் மூலம், நிலம்கீழ்க் கிடங்குகளினுள் செல்லும் கழிவின் அளவைக் குறைப்பதற்கான சந்தர்ப்பத்தை குடியிருப்பாளர்களுக்கு இந்தத் திட்டம் வழங்குகின்றது. உடைந்த பச்சைக் கொள்கலன்களையும் சமையலறைத் தொட்டிகளையும் மாற்றிக் கொள்ளும் மற்றும் சுற்றுப்புறத் திட்டங்கள் பற்றி அறியும் தெரிவுகளையும் இது மக்களுக்கு வழங்குகின்றது. சமூகச் சுற்றுச் சூழல் தினங்கள், ஏப்ரலில் இருந்து யூலை வரை 35 நிகழ்வுகளை நடத்தியதுடன் 18,696 பங்குகொள்பவர்களைக் கவர்ந்துள்ளன. இச் செய்முறையின் போது 117,370 kg மின்னணுவியல் பொருள்களும் 232,185 kg வீட்டிலுள்ள அபாயகரமான கழிவுகளும் சேகரிக்கப்படப்பட்டிருப்பதுடன், 81,245 kg மீளப்பாவிக்கக்கூடிய வீட்டுப் பொருள்கள் மற்றும் கலை மற்றும் கைவினைப் பொருள்கள் நிலம்கீழ் கிடங்குகளினுள் போய்ச்சேர்வதும் தடுக்கப்படப்பட்டுள்ளது. அத்துடன் 430 kg உணவு அன்பளிப்புக்கள் பெறப்பட்டன, 137 உரமாக்கல் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டன மற்றும் 1,760,630 தொன்களுக்கும் அதிகமான உரம் வழங்கப்பட்டது.

toronto.ca/environment_days

## O’Connor சமூகத்தில் உணவும் வேடிக்கையும்

O’Connor சமூக நிலையக் (1386 Victoria Park Avenue at O’Connor Drive) குடியிருப்பாளர்களுக்காக, யூன் 20ல், ரொறன்ரோ நகரின் பல பிரிவுகள் சமூக சோளப்பொத்தி வாட்டல் ஒன்றை நடாத்தின. சமூக அங்கத்தவர்களைச் சந்திப்பதற்கும், அந்தப் பகுதியிலுள்ள செயல்முறைப் பயிற்சிகளையும் சேவைகளையும் விளம்பரப்படுத்துவதற்குமான ஒரு சந்தர்ப்பத்தை நகரப் பணியாளர்களுக்கு இந்த நிகழ்வு வழங்கியது.

கிடைக்கும் இலவச செயல்முறைப் பயிற்சிகள் பற்றிய தகவல்களை குடியிருப்பாளர்களுக்கு வழங்குவதற்காக, Children’s Services, பூங்காக்கள், வனவியல் மற்றும் பொழுதுபோக்கு, ரொறன்ரோ பொதுச் சுகாதாரம், சமூக அபிவிருத்தி, நிதி மற்றும் நிர்வாகம், ரொறன்ரோ வேலைவாய்ப்பு மற்றும் சமூக சேவைகள் மற்றும் ரொறன்ரோ பொது நூலகம் என்பன உள்ளூர்ச் சமூக அமைப்புகளுடன் கூட்டுச்சேர்ந்தன.

இந்த நிகழ்வில் பங்குகொண்டவர்கள் கீழ்வருவன உள்ளடங்கலாக பல்வேறுபட்ட செயற்பாடுகளில் பங்கெடுத்தனர்:

• பிள்ளைகளுக்கான ஒரு இலவசமான பல்மருத்துவப் பரிசோதனைச் சிகிச்சையகம்

• Zumba, line dancing, யோகப்பியாசம் மற்றும் tai chi வகுப்புக்கள்

• பிள்ளைப் பராமரிப்பு மானியங்கள், ஊட்டச்சத்து, உடல்ரீதியான செயல்பாடுகள், பிரசவத்திற்கு முன்னதான, ஆரம்பகால குழந்தைப் பருவ மற்றும் குடும்ப ஆதரவு திட்டங்கள் பற்றிய தகவல்கள்

• வாசிப்பு வட்டங்கள் மற்றும் நூலக அட்டைப் பதிவு மற்றும் கோடை வாசிப்புத் திட்டங்களுக்கான சந்தர்ப்பங்கள்

• முகத்தில் ஓவியம், தண்ணீர் பலூன் செயல்பாடுகள் மற்றும் வேடிக்கை வெளிப்புற விளையாட்டுகள்

நகரப் பிரிவுகள், தங்களுக்குள்ளும் மற்றும் சமூக அமைப்புக்களுடன் தொடர்ந்து கூட்டுச் சேர்ந்துள்ள போது, நகரம் முழுவதும் உள்ள சமூகங்களில் உள்ள குடியிருப்பாளர்கள் மேலதிகமான சிறப்பான திட்டங்களுக்கும் சேவைகளுக்குமான அணுகையை அனுபவிக்க முடியும்.

toronto.ca/services
311

## Exhibition Place –வருடம் முழுவதுக்குமான மாநாடு மற்றும் சுற்றுலாக்களுக்கான கனடாவின் இலக்கு

ஒவ்வொரு வருடமும் 5.3 மில்லியனுக்கும் அதிகமான மக்களைக் கவர்ந்திழுக்கும், கனடாவின் மிகப் பெரிய பொழுதுபோக்கு இடம் Exhibition Place ஆகும். வருடத்தின் ஒவ்வொரு வாரமும் சமூக நிகழ்வுகள், வர்த்தக நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்வுகள், மாநாடுகள் போன்றவை 77-hectare இடத்திலுள்ள விருது பெற்ற இடமான Direct Energy Centre, Allstream Centre, BMO Field மற்றும் ஏனைய கட்டடங்களில் நடைபெறுகின்றன. வருடம் தோறும் நிகழும் 300 க்கும் மேற்பட்ட நிகழ்வுகளுடன், குறிப்பாக விளையாட்டு, கொண்டாட்டங்கள், பொழுதுபோக்கு, கலாச்சாரம் மற்றும் சுற்றுலா சார்ந்தவற்றுடன், Exhibition Place ரொறன்ரோவினதும் ஒன்ராறியோவினதும் பொருளாதாரத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது.

ரொறன்ரோ சர்வதேச படகுக் காட்சி, National Home Show, ரொறன்ரோ விளையாட்டு வீரர்கள் காட்சி, Honda Indy, Scotiabank ரொறன்ரோ கரிபியன் களியாட்டம், மற்றும் Canadian National Exhibition போன்ற வருடாந்த நிகழ்வுகள் ஒன்ராறியோ ஏரிக் கரையோரத்தில் நிகழ்கின்றன. நூற்றுக்கணக்கான கூட்டுத்தாபனக் கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் நேரடி விளையாட்டு நிகழ்வுகளுடன், மேலதிகமாக நிகழும் இந்த நிகழ்வுகள், Exhibition Place ஐ ரொறன்ரோ நகரினதும் மாகாணத்தினதும் குறிப்பிடத்தக்க பொருளாதார இயந்திரமாக மாற்றுகின்றன.

$4.6 மில்லியனுக்கும் மேலான இலாபமுள்ள ஒரு இடமாக Exhibition Place இருப்பதை 2012 கணக்காய்வு தெரிவித்துள்ளது. நகருக்கும் மாகாணத்துக்கும் $400 மில்லியன் பங்களிக்கும் Exhibition Place ன் பொருளாதாரத் தாக்கம் மேலும் சாதகமாக இருக்கின்றது. புதிய நிகழ்வுகள், கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளுக்கான உத்தியியல் திட்டமிடலும், அவற்றைத் தூண்டும் செயல்படுத்துகையும், இந்த வெற்றிக்குக் காரணமாக உள்ளன. அதே வேளையில் வெற்றிகரமான Canadian National Exhibition மற்றும் செலவு முகாமைத்துவப் பொறுப்பும் கூட இந்த வெற்றிக்குக் காரணமாகின்றன.

சுற்றுச்சூழல் கட்டடங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான புதிய கண்டுபிடிப்புகளில் உலகில் முன்னணியில் இருக்கிறது என அறியப்பட்ட Exhibition Place, ஏரிமுகப் புறத்திலுள்ள, பிரம்மாண்டமான விளையாட்டுத் தொகுதி உள்ளடங்கலாக, 400 விருந்தினர் அறைகள் மற்றும் உயர் நுட்ப வசதிகளுடன் கூடிய, விடுதி X என்ற ஒரு புதிய மாநாட்டு விடுதியை 2015 ல், தன்னுள் சேர்த்துக்கொள்கின்றது.

explace.on.ca

## பிரபல்யமான நிலத்தோற்றக் கட்டடக் கலைஞர்கள் ரொறன்ரோ நீர்முகத்துக்குப் புத்துயிர்ப்புக் கொடுக்கின்றார்கள்

ரொறன்ரோவின் நீர்முகத்துக்குப் புத்துயிர்ப்புக் கொடுப்பதற்காக உலகப் பிரபல்யம் பெற்ற சில கட்டடக் கலைஞர்கள் வேலை செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ரொறன்ரோவின் நீர்முகத்தின் சமீபத்திய செய்திட்டங்களில் பல, நியூ யோர்க்கின் Brooklyn Bridge Park; பொஸ்ரனின் Children's Museum Park; நியூ யோர்க்கின் High Line Park; இலண்டனின் Jubilee Gardens போன்ற உலகம் பூராவும் உள்ள பிரசித்தி பெற்ற செய்திட்டங்களைச் செய்த அதே நிறுவனங்களால் வடிவமைக்கப்படுகின்றன.

### Corktown Common

Don Lands மேற்கில் வேகமாக வளர்ந்துவரும் சமூகத்தில் முக்கிய பங்கை வகிக்கவிருக்கும், Corktown Common, நீர்முகத்தின் புதிய பூங்கா ஆகும். Michael Van Valkenburgh Associates, Inc., ஆல் வடிவமைக்கப்பட்ட இந்தப் பூங்கா, கைவிடப்பட்ட தொழில்துறைத் தளத்தை, ஆர்வமூட்டும் பல்வேறுவகைத் திட்டங்களினூடாக, வருடம் முழுவதும் சுறுசுறுப்பான, மீள இயற்கையாக்கப்பட ஒரு பொது இடமாக மாற்றியுள்ளது. வெள்ளப் பாதுகாப்பு நிலவமைப்பின் மீது புதுமையான முறையில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும், Corktown Common நகருக்கு பிரம்மிப்பூட்டக்கூடிய காட்சியை வழங்குகிறது.

### Queens Quay

Queens Quay- ரொறன்ரோவின் பிரதான நீர்முக வீதியின் புத்துயிர்ப்புக் கட்டுமானம் நன்கு நடக்கின்றது. West 8 + DTAHன், வடிவமைபின் அடிப்படையில் ரொறன்ரோ நீர்முகம் Queens Quay ஐ உலகத்திலேயே அழகான அகலமான நீர்முக வீதியாக மாற்றுகின்றது.

2015ல், பூர்த்தியானதும், Queens Quay பிரதான இடங்களை நீர் விளிம்பினூடாக இணைப்பதுடன், பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களுக்குப் பாதுகாப்பான, உல்லாசமான நடைபாதைகளை உருவாக்கும். அத்துடன் உள்ளூர்வாசிகளுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் ஒரு பொருளாதார ரீதியில் பரபரப்பான பகுதியாக இது மாறும்.

### Canada Square

Harbourfront Centre ன் ஒரு பழைய நிலக்கீழ்மணல் வாகனத்தரிப்பிடம் Canada Square, Ontario Square மற்றும் Exhibition Common ஆக மாற்றப்பட்டுள்ளது – புதிய பொது இடங்கள் நீர்முகத்தில் உள்ளன. இந்த வடிவமைப்பு (Michael Van Valkenburgh Associates, Inc. ஆல் அமைக்கப்படும்) அசையும் Aspen மரங்கள், வியத்தகு redwoods என்பன உள்ள 'சிறிய காடுகள்' மற்றும் கண்ணை கவரும் நகரம் மற்றும் ஏரிக் காட்சிகளைக் காட்டுகின்றது. புதிய நிலம்கீழ் வாகனத் தரிப்பிடத்தின்

உள்கட்டமைப்பு கூட வெறும் ஒரு செயல்பாட்டுத் துண்டாக மட்டும் இருக்கவில்லை - இது, James Carpenter எனும் விருது பெற்ற கட்டடக் கலைஞன்/வடிவமைப்பாளரின் Light Cascade என அழைக்கப்படும் ஒரு மூன்று மாடி உயர்நிலை கலை துண்டை உள்ளடக்கியுள்ளது.

waterfrontoronto.ca

# 2014 நகராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஜனவரி 2 முதல் தாக்கல் செய்யலாம்

கீழ்வரும் அலுவலகங்களுக்காக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படலாம்:

- நகர பிதா
- நகரசபை அங்கத்தவர்
- அறங்காவலர், ரொறன்ரோ பிராந்தியக் கல்விச் சபை
- அறங்காவலர், ரொறன்ரோ பிராந்தியக் கத்தோலிக்கக் கல்விச் சபை
- அறங்காவலர், Conseil scolaire Viamonde
- அறங்காவலர், Conseil scolaire de district catholique Centre-Sud

ஒருவருக்குப் பின்வரும் தகுதிகள் இருந்தால் அவர் அலுவலகத்துக்கு முன்மொழியப்படலாம்:

- ஒரு கனடாக் குடியுரிமையாளர்
- குறைந்தது 18 வயது
- ரொறன்ரோ நகரின் ஒரு குடியிருப்பாளர், அல்லது ரொறன்ரோ நகரிலுள்ள சொத்து ஒன்றின் உரிமையாளர் அல்லது வாடகை கொடுப்பவர் (அல்லது சொத்து உரிமையாளர் அல்லது வாடகை கொடுப்பவரின் வாழ்க்கைத் துணை)
- வாக்களிக்க, அல்லது நகராட்சிப் பதவிக்கு வரமுடியாதபடி சட்டபூர்வமாக தடை செய்யப்படாதவர்

தகுதிகள், தேவைகள் மற்றும் பிற முக்கிய பிரச்சாரத் தகவல்கள் பற்றிய விவரங்களைப் பார்க்க, எமது இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள் :

toronto.ca/elections

## பனிக்காலத்தில் வீதிகளையும் நடைபாதைகளையும் துப்புரவாக வைத்திருத்தல்

பனி விழ ஆரம்பித்ததும், போக்குவரத்து இயங்குவதை அனுமதிப்பதற்காக, முடிந்தளவு விரைவாகவும் திறமையாகவும் துப்பரவாக்கப்பட்ட வீதிகள் இருப்பதையே சாரதிகளும் துவிச்சக்கரவண்டி ஓட்டுபவர்களும் விரும்புகின்றனர். பாதுகாப்பாக நடப்பதற்கு நடைபாதைகள் துப்புரவாக்கப்படல் பாதசாரிகளுக்கு அவசியம்.

பனி விழ ஆரம்பிக்க முன்பே ரொறோன்ரோ நகர் செயற்பட ஆரம்பிக்கின்றது. போக்குவரத்துச் சேவைகள் தமது உப்புக் கனரக வண்டிகளை விரைவுசாலைகளுக்கும் பிரதான வீதிகளுக்கும் அனுப்புகின்றன. பிரதான வீதிகள் பூர்த்தியான பின்னரே உள்ளூர் வீதிகளிலும் சந்துக்களிலும் உப்பு இடப்படுகின்றது. இரண்டு சென்றிமீற்றர்களுக்கு பனி குவியத்தொடங்கும் போது, விரைவுசாலைகளில் பனி அடைவுகளை அகற்றல் நடக்கும். ஐந்து சென்றிமீற்றர்களுக்கு பனி குவியத்தொடங்கும் போது, பிரதான வீதிகளில் பனி அடைவுகளை அகற்றல் நடக்கும். செயற்பாடு முடியும்வரைக்கும் விரைவுசாலைகளிலும் பிரதான வீதிகளிலும் பனி அடைவுகளை அகற்றல் தொடரும்.

பனிகொட்டுவது நிற்கும் போது, எட்டு சென்றிமீற்றர்களுக்கு பனி குவிந்திருந்தால், உள்ளூர்ப் பாதைகளில் பனி அடைவுகளை அகற்றல் ஆரம்பிக்கப்படும். பனி விழுந்து முடிந்த பின்னர், பொதுவாக 14-16 மணித்தியாலங்களில் உள்ளூர்ப் பாதைகளின் பனி அடைவுகளை அகற்றல் பூர்த்தியாகும்.

இயந்திரம் மூலம் அகற்றப்படக் கூடியதாக இருக்கும், வாகனப் பாதையை மறைத்திருக்கும் பனிக்குவியல்களையும் நகர் அகற்றும். பொதுவாக, வீதிகளின் பனி அடைவுகளை அகற்றப்பட்டு ஒன்று முதல் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் வாகனப் பாதையை மறைத்திருக்கும் பனிக்குவியல்கள் அகற்றப்படும்.

நடைபாதைகளிலும் உள்ளூர் வீதிகளிலும் இருக்கும் பனி, இயந்திரம் மூலம் அகற்றப்படக்கூடியதாக உள்ள போது, எட்டு சென்றிமீற்றர்கள் பனி விழுந்த பின்னர் நகரத்தால் அகற்றப்படும் (ஜனவரியிலும் பெப்ரவரியிலும் ஐந்து சென்றிமீற்றர்கள்). நகர மையத்திலுள்ள சொத்து உரிமையாளர்கள் தங்களுடைய நடைபாதைகளிலுள்ள பனியை பனிப்புயல் முடிந்து 12 மணித்தியாலத்துக்குள் அகற்ற வேண்டும்.

toronto.ca/transportation
311

## நாங்கள் எப்படிச் செயற்படுகின்றோம்?

எங்கள் ரொறன்ரோவை எப்படி மேம்படுத்தலாம் என்பது பற்றிய உங்களுடைய சிந்தனைகளை எங்களுடன் பகிருங்கள்

இந்தச் செய்திமடல், எங்கள் ரொறன்ரோ, பற்றிய அபிப்பிராயத்தை குடியிருப்பாளர்களிடம் நகர் கேட்கின்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நாம் அறிய விரும்புகின்றோம். இதை எப்படி நாங்கள் முன்னேற்றலாம்?

ஒரு சிறிய, இணைய ஆய்வொன்றை cityoftoronto.fluidsurveys.com/s/ourtoronto2013/ ல் பூர்த்திசெய்யுங்கள்.

# Kamal Al-Solaylee 2013 Toronto Book Award ஐ வென்றுள்ளார்

இந்த வருட, 2013 ரொறன்ரோ புத்தக விருதை தனது memoir, Intolerable: A Memoir of Extremes க்காக Kamal Al-Solaylee பெற்றுள்ளார். Toronto Reference Library ல் ஒக்ரோபர் 9ம் திகதி நடந்த விருது விழாவில் Al-Solaylee இந்தக் கௌரவத்தைப் பெற்றார். இவ் வருடம், Toronto Book Awards ன் 39 வருடப் பூர்த்தியைக் குறிக்கின்றது . ரொறன்ரோ நகர சபையால் 1974 ல், ஸ்தாபிக்கப்பட்ட Toronto Book Awards ரொறன்ரோவின் சிருஷ்டிப்புகளான இலக்கிய அல்லது கலைத் தகுதியுள்ள புத்தகங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கு கௌரவம் வழங்குகின்றது. இந்த வருடாந்த விருதுகள் $15,000 ஐப் பணப் பரிசாக வழங்குகின்றன. இறுதிச் சுற்றுக்குப் போகும் ஒவ்வொருவரும் $ 1,000 பெறுகின்றனர், மற்றும் மீதமுள்ள பரிசு பணத்தை வெற்றிபெறும் எழுத்தாளர் பெறுவார்.

Toronto Book Awards குழுவினர் வெற்றியடைந்த புத்தகம் பற்றிக் கருத்துரை எழுதியுள்ளனர்: "Kamal Al-Solaylee, ஒரு ஓரினச் சேர்க்கையாளராக, அவருடைய அரபுக் குடும்பத்தையும் கலாசாரத்தையும் விட்டு, சமய, சமூக அடையாளங்களிலிருந்து விடுதலை பெற்ற ஒரு வாழ்வை நாடிச் செல்லும் போது அனுபவிக்கும் உள்மனக் கொந்தளிப்பு மற்றும் உணர்ச்சிச் சிக்கல்களை, மனதை நெகிழவைக்கும் வண்ணத்தில் Intolerable சித்தரிக்கின்றது. ரொறன்ரோவில் அவர் ஒரு ஏற்புத்தன்மையை, சமூகத்தை மற்றும் இடத்தை உணர்கிறார். மத்திய கிழக்கின் முரண்பாட்டின் பின்னணியில் அமைத்து, கடினமான தெரிவுகளை அவர் செய்ய வேண்டியிருந்ததன் விளைவாக அவர் உணரும் இழப்பு மற்றும் துக்க உணர்வை அவர் தெளிவாகச் சித்தரித்துள்ளார். இது மனதைக் கவரும் விதத்தில், உணர்ச்சிபூர்வமாக எழுதப்பட்ட வாழ்க்கைக் குறிப்பாக உள்ளது, அத்துடன் குடும்ப உறவுகளின் இயக்கவியலையும் அரசியல் மற்றும் கலாச்சாரத் தாக்கங்கள் ஒருவருடைய வாழ்க்கையை வடிவமைப்பது பற்றியும் ஆராய்கிறது."

இந்த நிகழ்வில் இறுதிச் சுற்றில் இருந்த மற்ற நால்வரும் கூட கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் உள்ளடக்குபவர்கள்: Patrick Cummins (நிழல்படங்கள்) மற்றும் Shawn Micallef (எழுத்து) அவர்களுடைய புகைப்படம் எடுத்தல் பற்றிய விளக்க குறிப்புகளுடனான புத்தகத்துக்காக, Full Frontal T.O. (Coach House Books); Kevin Irie அவருடைய கவிதைத் தொகுப்புக்காக, Viewing Tom Thomson, A Minority Report (Frontenac House Poetry); Aga Maksimowska அவவுடைய நாவலுக்காக, Giant (Pedlar Press); மற்றும் Katrina Onstad அவவுடைய நாவலுக்காக, Everybody has Everything (McClelland & Stewart).

இந்த விருதுகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்கள் பற்றி நடுவர்கள் என்ன சொன்னார்கள் போன்ற மேலதிக விபரங்களுக்கு, பார்வையிடுங்கள் :

toronto.ca/book_awards

# ரொறன்ரோ 2015 Pan Am விளையாட்டுச் சின்னத்தை நீங்கள் பார்த்தீர்களா?

யூலை, 2015 ல் Pan American விளையாட்டும், ஆகஸ்ட் 2015 ல் Parapan American விளையாட்டும் ரொறன்ரோவில் நடப்பதில் ரொறன்ரோ பெருமை கொள்கிறது.

இந்தக் கோடைகாலத்தில் நடந்த ஒரு வேடிக்கை நிறைந்த நிகழ்வின் போது, விளையாட்டின் அதிகாரப்பூர்வ சின்னமான PACHI the Porcupine ஐ, எல்லாவயதுச் சிறுவர்களும் முதல் முதல் வரவேற்றனர். மாகாணம் முழுவதுமான நிகழ்வுகளுக்கு எடுத்துச்செல்லப்படுவதும், விளையாட்டுப் பற்றி மக்களை உற்சாகமூட்டுவதுமாக, கோடை முழுவதும் PACHI சுறுசுறுப்பாக வைக்கப்பட்டிருந்தது.

PACHIன் 41 பிரகாசமான நிறமுடைய இறகுகள் (இந்த Pan American விளையாட்டில் பங்குகொள்ளும் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒன்றாக) சிறப்பு குணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன: ஆர்வம், ஒத்துழைப்பு, உறுதிப்பாடு மற்றும் சிருஷ்டிப்பு. தனது உற்சாகம் மிக்க தயார்ப்படுத்தலாலும் சுறுசுறுப்பான தோற்றத்தாலும் விளையாட்டின் வலு எப்படிச் சமூகங்களை ஈடுபாடு கொள்ளச் செய்யும் என்பதையும், எப்படி ஒரு ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கும் என்பதையும் விளங்கப்படுத்துவதை அவர் நேசிக்கிறார்.

இந்தச் சிறிய ஆள், 2015 விளையாட்டுக்களில் நிகழப்போகும் 51 விளையாட்டுக்களில் ஒன்றில் பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் ஈடுபடுவதை நிச்சயமாக ஊக்குவிப்பார். உங்களுக்கு அருகில் உள்ள விளையாட்டுக்களைக் கண்டறிவதற்கு toronto.ca/parks/prd/torontofun/index.htm ல் Live the Games ஐப் பார்வையிடுங்கள்.

ஒவ்வொரு சமூகத்திலும் Pan Am/Parapan Am உற்சாகத்தைக் கொண்டுவருவதற்காக, ரொறன்ரோவையும் Greater Golden Horseshoe area ஐயும் தொடர்ந்து PACHI சுற்றுலாச் செய்யும் போது உங்களுடைய அயலில் அவரைப் பாருங்கள். அவரது திட்டத்தை தேர்ந்தெடுக்கவும் அல்லது அவரை உங்களுடைய நிகழ்வுக்கு toronto2015mascot.ca/appearances ல் அழைக்கவும்.

toronto.ca/panam2015

# ரொறன்ரோ அவசரகால மருத்துவ சேவைகள், மருத்துவ உதவியாளர் (Paramedic) மற்றும் அவசரகால மருத்துவத்திற்காக ஆட்களை அனுப்புபவர் (dispatcher) பட்டப்படிப்புக்களை ஒன்றுசேர்த்து வழங்குகிறது

யூலை 19, வெள்ளிக்கிழமை, ரொறன்ரோ அவசரகால மருத்துவச் சேவைகள் (EMS) முதல்வர் Paul Raftis, கௌரவ முதல்வர் Major-General Richard Rohmer மற்றும் வைத்தியசாலைக்குப் போவதற்கு முன்பான மருத்துவத்துக்கான Sunnybrook Centre இயக்குனர் Dr. Richard Verbeek ஆகியோர் ரொறன்ரோ EMS தலைமையகத்தில் ஒரு பட்டமளிப்பு விழாவை நடாத்தினார்கள். இருபத்தி ஐந்து மருத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆறு அவசரகால மருத்துவத்துக்காக ஆட்களை அனுப்புபவர்கள் தங்களுடைய தோள் முத்திரைகள் மற்றும் சான்றிதழ்களை குடும்பத்தவர்களும் நண்பர்களும் கலந்துகொண்ட அந்த நிகழ்வில் பெற்றுக்கொண்டார்கள்.

புதிய வேலையாட்கள் பல்வேறுபட்ட கலாச்சாரங்களிலிருந்தும் கல்விப் பின்புலங்களிலிருந்தும் வந்துள்ளார்கள். ஆங்கிலம் பேசுவதுடன் சிலர், பிரஞ், ஸ்பானிஷ், ரஷ்ய, போர்த்துக்கேய, கொரிய, ஃபார்சி, இத்தாலிய, ஹீப்ரு மற்றும் வியட்னாமிய மொழிகளைச் சரளமாகப் பேசுவார்கள். அவர்கள் உயிரியல், சமூகவியல், நரம்பியல் மற்றும் மனித உடலியக்கவியல் உள்ளடங்கலான பல்வேறு வகை இளமாணிப் பட்டதாரிகள்.

தமது பல்கலைக்கழக கல்வியுடன், ஒவ்வொரு மருத்துவ உதவியாளரும் இரண்டு ஆண்டு கல்லூரிப் படிப்பையும், தீவிரமான நான்கு வார, ரொறன்ரோ EMS ஆற்றுப்படுத்தல் பயிற்சியையும் நிறைவு செய்துள்ளார்கள்.

புதிய வேலையாட்களுக்கான அவருடைய குறிப்புரையில், சவாலாக அமைவதுடன் சாதனைசெய்யும் உணர்வைக் கொடுத்து அவர்களது மனதை நிறைக்கக்கூடிய ஒரு கௌரவமான பொதுச் சேவைத் தொழில் வாழ்க்கையைத் துவங்கும் அவர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று பட்டதாரிகளுக்கு அவர் நினைவூட்டினார். நிபுணத்துவம் மற்றும் இரக்க உணர்வுடன் அவர்கள் வழங்கும் அவசர மருத்துவ சேவையால் ஒருவரின் வாழ்க்கை நிகழ்வுகளின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தமது ஆற்றலைப் பற்றி பட்டதாரிகள் பெருமை கொள்ள வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

பட்டதாரிகள் அனைவரும் யூலை 20 ல் இருந்து ரொறன்ரோ குடியிருப்பாளர்கள் மற்றும் விருந்தினர்களுக்குச் சேவை செய்யத் தொடங்கியுள்ளனர்.

torontoems.ca

# Winterlicious வருகின்றது!

இப்போது, இதன் 12வது வருடம், ரொறன்ரோவுக்கு மிகவும் பிடித்த சமையற்கலைக் கொண்டாட்டம், Winterlicious, கிட்டத்தட்ட 200 உணவகங்களில், மதிய, இரவு உணவுப் பட்டியல்களில், முன்நியமிக்கப்பட்ட உணவுகளை, குறிப்பிட்ட விலைகளில் வழங்குகின்றது.

குறிப்பிட்ட விலைகளில், முன்நியமிக்கப்பட்ட உணவுகள் (Prix Fixe) விளம்பரமும், சமையற்கலை நிகழ்வுகளின் தொடரும் ஜனவரி 31 முதல் பெப்ரவரி 13, 2014 வரை நிகழும். ரொறன்ரோவின் சில சிறந்த உணவகங்களாலும் நிகழ்விடங்களாலும் நடாத்தப்படும் பல்வேறு சமையல்வகைகளைக் காட்டும் ஈடுஇணையற்ற, நுழைவுச்சீட்டுள்ள சமையற்கலை அனுபவங்களை சமையற்கலை நிகழ்வுகள் தொடர் வழங்குகின்றது.

சமையற்கலை நிகழ்வுகள் தொடருக்கான நுழைவுச்சீட்டுக்கள், டிசம்பரில், உங்களுடைய அன்பளிப்புத் தேவைகளுக்காக, சரியான நேரத்தில் விற்பனைக்கு வருகின்றன. குறிப்பிட்ட விலைகளில், முன்நியமிக்கப்பட்ட உணவுகளுக்கான ஒதுக்கீடுகள் ஜனவரி நடுப்பகுதியில் ஆரம்பிக்கின்றன.

toronto.ca/winterlicious

## நடுத்தர பிள்ளைப்பருவத்தினருக்கான பாடசாலைக்கு முன்பும் பின்புமான செயல்முறைப்பயிற்சிகள்

ஆறுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட வயதுள்ளவர்களை நடுத்தர பிள்ளைப்பருவத்தினர் எனலாம். வாழ்க்கையின் இந்த முக்கிய பருவத்திலுள்ள பிள்ளைகளின் மனநல, சமூக விருத்தியில், கடந்த சில வருடங்களாக அதிக அக்கறை காட்டப்படுகின்றது. இந்த ஆறு வருட காலத்தில், பிள்ளைகள் தங்களுடைய பிள்ளைப்பருவத்தில் இருந்து இளமைப்பருவத்துக்கு மாறும் நிலைமாற்றத்திற்கு உதவும் முக்கிய புரிதிறன் மற்றும் சமூகத் திறன்களை விருத்தி செய்கின்றனர். பிள்ளைகளுடைய வளர்ச்சியில் பாடசாலைக்கு முன்பும் பின்புமான செயல்முறைப்பயிற்சிகள் ஒரு முக்கிய பங்கை வகிக்கலாம்.

பாடசாலைக்கு முன்பும் பின்புமான செயல்முறைப்பயிற்சிகள், கல்வி சார்ந்த மற்றும் ஒருவருக்கு ஒருவரிடையேயான திறன்களை மேம்படுத்தவும், அவர்களின் மீதமுள்ள வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தனிப்பட்ட ஆர்வங்களை அவர்கள் ஆராயவும், பிள்ளைகளுக்கு உதவிசெய்கின்றன.. சில செயல்முறைப்பயிற்சிகள், அவர்கள் திறமை காட்டக்கூடிய பாடங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் அல்லது அவர்களுடைய முழுமையான திறனை அடையவிடாமல் அவர்களைத் தடுக்கும் தடைகளைக் கடக்க உதவி செய்வதன் மூலம், பிள்ளைகள் தங்களுடைய கல்விசார்ந்த ஆற்றுகையில் மனதை ஒருமுகப்படுத்த வழிவகுக்கின்றன. ஏனைய செயல்முறைப்பயிற்சிகள் வாழ்க்கை பூராவுமான பொழுதுபோக்காக அல்லது முழுநேரத் தொழில் வாழ்க்கையாகக் கூடிய தனிப்பட்ட ஆர்வங்களை அவர்கள் ஆராய்வதற்கு, பிள்ளைகளுக்கு வழிவகுக்கின்றன. பாடசாலை மற்றும் வீட்டிலிருந்து வேறுபட்ட அமைப்புகளில் பிள்ளைகள் மற்றும் பெரியவர்களைச் சந்திப்பதன் மூலம் ஒருவருக்கு ஒருவரிடையேயான முக்கிய திறனையும் பிள்ளைகள் விருத்திசெய்கின்றார்கள் .

toronto.ca/children/middlechildhood

# அறிமுகப்படுத்துகிறோம்: ரொறன்ரோ ஆரம்பகாலக் கற்றல் மற்றும் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள்

வாழ்க்கையில் உள்ள பெருமளவு விடயங்களைப் போல, ஆரம்பகாலப் பிள்ளைப்பருவக் கற்றல் துறையும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. சமீபகாலம் வரையில், பிள்ளைப் பராமரிப்பு இது தான் எனக் கருதப்பட்டது: பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் வேலையில் அல்லது பாடசாலையில் இருக்கும் போது பிள்ளைகள் பாதுகாப்பாக இருப்பதற்காகப் பிள்ளைகளைக் கவனித்தல். பாடசாலைக்கு முன்பான வருடங்கள் ஒரு பிள்ளையின் ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்வுக்கும், அவர்களது வாழ்க்கையின் எதிர்கால வெற்றிக்கும் மிகவும் பங்களிப்பு ஆற்றுவதை, காலங்களினூடாக சான்றுகள் காட்டியுள்ளன.

ஒரு பிள்ளை பாடசாலைக்குள் நுழையும் முன்பே கற்றல் தொடங்குகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் பிள்ளைப் பராமரிப்புச் சூழல் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. இதை அங்கீகரிக்கும் வகையில், நகராட்சிப் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் தனது பெயரை ரொறன்ரோ ஆரம்ப கற்றல் மற்றும் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகள் என பெயர் மாற்றம் செய்கின்றது. இந்தப் பெயர் மாற்றம் நடக்கும் போது, 50 க்கும் மேற்பட்ட பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் குடும்பங்கள் அதே சிறந்த செயல்முறைப்பயிற்சிகளையும் ஆதரவையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு தொடர்ந்தும் பெறுவார்கள். வருகின்ற மாதங்களில், பெயர் மாற்றத்தைக் காட்டக்கூடியதாக நிலையங்களின் பெயர்ப்பலகைகள் புதுப்பிக்கப்படும்.

toronto.ca/children/TELCCS

## ரொறன்ரோ சந்தை காட்சியகத்தில் Smart Address திறக்கின்றது

Smart Address: Art Deco, Style Moderne மற்றும் ரொறன்ரோவிலுள்ள அவர்களுடைய சமகாலத்தவர்கள், 1920 மற்றும் 1930 களில் வடிவமைக்கப்பட்ட புதுமையான கட்டடங்கள் மூலம் நகரின் கட்டடக்கலை வரலாற்றை  ஆராய்ந்து, ரொறன்ரோ சந்தைக் காட்சியகக் கண்காட்சியில் அவற்றை வெளிப்படுத்துகின்றார்கள்.

போருக்கிடையான காலத்தில், இந்த நகரின் கட்டமைப்பு எப்படி ஆக்கபூர்வமான மாற்றம் பெற்றது என்பதை Smart Address, கறுப்பு மற்றும் வெள்ளை நிறப் புகைப்படங்கள் மற்றும் ஆவணக்காப்பகப் பொருட்கள் மூலம் காட்டுகின்றது.

Sterling Tower மற்றும் Concourse Building போன்ற பல ரொறன்ரோ கட்டடங்களில் உள்ள வளமான, துடிப்பான Art Deco வடிவங்களின் உயிர்ப்பான பயன்பாட்டிலும், எதிர்காலத்திற்குரிய, மிகச்சிறிய பிரகாசமான நிறங்களும் கேத்திரகணித உருவங்களும் உள்ள (Moderne) வடிவத்திலும் இந்த மாற்றம் தெரிகின்றது.

நகரத்தின் சில சிறந்த கட்டடக்கலைப் பாரம்பரியத்தை, அவற்றின் உண்மையான வடிவங்களில் கண்காட்சி வெளிப்படுத்துகிறது. சமீப காலங்களில், இந்த அடையாளக் கட்டமைப்புகள் சில, புதுப்பிப்புரீதியான மறுசீரமைப்புக்கு உட்பட்டிருக்கின்றன. புகழ்பெற்ற நம்பிக்கையான சீரமைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக , College Park, 7வது மாடியில் உள்ள Carlu நிகழ்வு இடம் உள்ளது,

இந்தக் கண்காட்சி, ஒன்ராறியோ கட்டடக்கலைப் பாதுகாப்பகத்தின் ஆரம்பமும், பெரிய கிளையுமான ரொறன்ரோ கட்டடக்கலைப் பாதுகாப்பகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டது. கண்காட்சி மற்றும் காட்சியகம் பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்குமிடம்:toronto.ca/culture/the_market_gallery

## Scotiabank nuit blance க்காக ரொறன்ரோ தெருக்களில் திரளான மக்கள்

ஒவ்வொரு வருடமும் ரொறன்ரோவின் Scotiabank Nuit Blanche தன்னை விஞ்சுகிறது, இந்த வருடத்தின் எட்டாவது நிகழ்வும் இதற்கு விதிவிலக்கல்ல, ரசிகர்கள், முதன் முதல் பார்த்தவர்கள் மற்றும் விமர்சகர்கள் போன்றோரின் ஆரவாரமான விமர்சனங்களை பெற்றுள்ளது.

ஒக்ரோபர் 5/6 இரவுகளில், உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் நடந்த, இரவு முழுவதுமான இலவசக் கொண்டாட்டத்தில் சமகாலக் கலையை அனுபவித்த படி, எல்லா வயதிலுமுள்ள கலைப் பிரியர்களும் ரொறன்ரோ தெருக்களை வலம்வந்தார்கள். இந்த நிகழ்வு, குறிப்பிடத்தக்க பொருளாதாரத் தாக்கத்தை வழங்கியதுடன் ஒரு உலகளாவிய கவனத்தை ரொறன்ரோவுக்குக் கொடுத்து, நகரத்துக்கு வெளியிலிருந்து வந்த பல விருந்தினர்களை மீண்டும் வரவழைத்திருந்தது.

இந்த வருடத்தின், சேகரிக்கப்பட்ட மூன்று கண்காட்சிகள்– "Off to a flying start," "PARADE" மற்றும் "Romancing the Anthropocene" – ஒவ்வொன்றும் அவற்றின் அளவு, கதை, செயலாக்கம் மூலம், பார்வையாளர்களை அடிக்கடி கவர்ந்து ஈர்த்து, ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒன்றை வழங்கியது. அனேகமான தனிப்பட்ட செயற்திட்டங்கள் ரொறன்ரோவுடையதாக இருந்தன அத்துடன் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட மனதைக்கவரும் மூன்று தனிப்பட்ட செயற்திட்டங்களை உள்ளடக்கியிருந்தன. Scotiabank's கலை நிறுவல், Inspired Night, காட்சியில் பார்வையாளர்களைப் பங்குகொள்ளச் செய்ததன் மூலம் அதன் பெரும்விதானத் திரைகளில் அனைவரினதும் முழுமையான உணர்வுகளைக் கைப்பற்றிக்கொண்டது. எல்லா நிறுவல்களும், கலை, பார்வையாளர்கள் மற்றும் பொது இடங்களிடையே எந்தத் தடையுமில்லாமல், நகரம் இரவில் உயிர்ப்புடன் இருக்கும் போது மட்டுமே வரக் கூடிய சமூகத்தின் ஒரு தனித்துவமான உணர்வுக்குப் பங்களிப்புச் செய்தன.

இதுவரை, அதிகம் பேசப்பட்ட ஒரு சிறப்பம்சம், Scotiabank Nuit Blanche க்கென சிறப்பாகச் செய்யப்பட்ட, உலக புகழ்பெற்ற சீனக் கலைஞர் Ai Weiweiன் Forever Bicycles ன் ஒரு புதிய பதிப்பு ஆகும். Nathan Phillips Squareல், நீடிக்கப்பட்ட காலத்திற்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இது, இந்தச் செய்திட்டத்தின் இன்றுவரைக்குமான ஒரு மிகப்பெரிய பதிப்பு ஆகும், அத்துடன் இது முதல் தடவையாக வெளியே நிறுவப்பட்டுள்ளது. 3.144 மிதிவண்டிகளைக் காட்டும், மூன்று மாடிகள் உயரத்தில் இருந்த இந்தச் சிற்பம் பார்ப்பதற்கு முழுமையான ஒரு விந்தையாக இருந்தது.

Scotiabank Nuit Blanche 2014 திட்டங்கள், அடுத்த வருடத்துக்கான சேகரிப்புக்கள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன என்ற அறிவிப்புடன் ஏற்கனவே நன்றாக நடந்துகொண்டிருக்கின்றன.

scotiabanknuitblanche.ca

## Cavalcade of Lights ல் நவம்பர் 30 ல் முழுக் குடும்பத்துக்குமான வேடிக்கை

நவம்பர் 30, சனிக்கிழமை, Nathan Phillips Square ரொறன்ரோவுக்குப் பிடித்தமான கொண்டாட்டத்தை மீளவும் நடத்துகிறது, இலவசமான இரவு – Great Gulf வழங்கும் Cavalcade of Lights.

இயக்குனர் Wade O. Brown தலைமையில் அனைத்து நட்சத்திர குழுவுடன் பல்வேறுவிதமான விடுமுறை விருப்புக்களுடன் காட்சி ஆரம்பமாகின்றது. சிறப்பு விருந்தினர்களான Cold Specks மற்றும் Tyler Shaw ஆகியோர் குழுவில் பின்னர் சேர்ந்து கொள்வார்கள்.

Cold Specksன் அறிமுக ஆல்பமான I Predict A Graceful Expulsion, கௌரவமிக்க Polaris Music Prize ஆகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இது இந்த கனடாக் கலைஞருக்கு Juno விருதுக்கு பெயரைச் சிபாரிசு செய்துள்ளதுடன் உலகம் முழுவதும் பாராட்டையும் பெற்றுக் கொடுத்துள்ளது. அவரது ஆத்மார்த்தமான குரல், தொடர் கும்பல் தாளங்கள் மற்றும் எளிய இசைத் தெரிவுகளால் பார்வையாளர்கள் அவவிடமிருந்து விலக முடியாமலிருக்கும். 2012ல், MuchMusic Covers போட்டியில் ஏனைய 13,000 பேரைத் தோற்கடித்து B.C. பூர்வீகவாசி Tyler Shaw வெற்றிபெற்றார். அன்றிலிருந்து அவர் உருவாக்கி வரும் ஒரு ஆர்வமுள்ள ரசிகர் தளம், அவரது முதல் பாடலான "Kiss Goodnight," சிறந்த 25 பாடல்களுள் ஒன்றாக வரவும் அது நிறைய வருமானத்தைப் பெற்றுத்தரவும் அவருக்கு உதவியுள்ளது.அவருடைய "By My Side," என்ற புதிய தனிப்பாட்டும் ஒளிப்பதிவும் இப்போது உச்ச விற்பனையில் உள்ளது.

இங்குள்ள உற்சாகமூட்டும் ஒரு பனிக் கட்டி வளையம், புதுவருடத்துக்கான வழமையான பின் நோக்கி எண்ணல் மற்றும் மரத்துக்கும் முழு இடத்துக்குமான மாய விளக்குகள் யாவும், பிரமிப்பூட்டக்கூடிய. வானவேடிக்கைக் காட்சிக்கு வழிவகுக்கும். இவை எல்லாவற்றுடனும் நினைவில் வைக்கக் கூடிய ஒரு அசாதாரண இரவு உங்களுக்குக் கிடைக்கும்.

toronto.ca/special_events

# சுற்றுச்சூழல் கூரை ஊக்கத் திட்டம்

ரொறன்ரோவில் பசுமை மற்றும் Cool Roofs க்கு மானியங்கள்

• குடியிருப்பு

• கைத்தொழில்

• வர்த்தகம்

• நிறுவனம்

ரொறன்ரோவில் உள்ள கட்டடங்களில் பசுமை அல்லது cool roofs நிர்மாணிக்க ரொறன்ரோ நகர் மானியம் வழங்குகிறது.
சுற்றுச் சூழல்- கூரைகள் சக்திப் பாவனையையும் காலநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கும் மாசுவெளியேற்றங்களையும் குறைக்க உதவுகின்றன.

**பச்சைக் கூரை மானியம்**

$75 / m2 முதல் அதிகபட்சத் தொகையாக $100,000

கீழ்வருவனவற்றில் பச்சைக் கூரைகள் போடுவதற்கு மானியங்கள் கிடைக்கும்:

- ஏற்கனவேயுள்ள கட்டடங்கள்;
- மொத்த தளப்பரப்பு 2,000 m2 க்கு குறைவான புதிய கட்டடங்கள்;
- அனைத்துப் புதிய மற்றும் ஏற்கனவே இருக்கும் ரொறன்ரோ பொது மற்றும் தனியார் பாடசாலைச் சபைக் கட்டடங்கள்.

## Cool Roof மானியங்கள்

ஏற்கனவேயுள்ள கூரைக்குப் பூச்சுப் பூச $2 / m2 அல்லது
புதிய கூரை மென்படலத்துக்கு $5 / m2 அதிக பட்சத் தொகை $50,000 வரை

ஏற்கனவே இருக்கும் அனைத்துக் கட்டடங்களுக்குமான cool roofs க்கு மானியங்கள் கிடைக்கும்.

மேலும் அறியுங்கள் அத்துடன் இணையத்தில் விண்ணப்பியுங்கள்: toronto.ca/livegreen/ecoroofs

## மின்–இற்றைப்படுத்தல்களுக்குப் பதியுங்கள்

செய்தி வெளியீடுகள், ஊடக ஆலோசனைகள் மற்றும் பிற நகரத் தகவல்களைப் பெற

நகரச் செய்தி வெளியீடுகள், ஊடக ஆலோசனைகள், மற்றும் ஏனையத் தகவல்கள் பற்றிய இற்றைப்படுத்தல்களை தன்னியக்கமான மின்னஞ்சல்கள் அல்லது செய்தியூட்டம் மூலம் பெற ரொறன்ரோக் குடியிருப்பாளர்கள் பதிவு செய்யலாம்.Twitterலும் toronto.ca/e-updates பாருங்கள்.